LIBRARY
10 OCT 1968
STATE LEGISLATURE, M

தமிழக சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1968 பிப்ரவரி 29

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 9 00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், **திரு. சி. பா. ஆதித்தனுர்,** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

திரு. எஸ். பொன்னுசாமி நாடார், முன்னுள் உறுப்பினர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1962-லிருந்து 1967-ம் ஆண்டுவரை தூத்துக்குடித் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னுள் உறுப்பினர் திரு. எஸ். பொன்னுசாமி நாடார் அவர்கள் 1968-ம் வருடம் பிப்ரவரி மாதம் 17-ம் தேதியன்று மறைந்து விட்டதைக் குறித்து, இந்தப் பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும், அவரை இழந்த குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.

அன்னருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றார்கள்.)

2. வினுக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்

* 100 வினு.—**திரு. ஜெ. பெள்ளி கௌடர் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில், பெண்களுக்கென ஆசிரியை பயிற்சிப் பள்ளி ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் என்றுல், அடுத்த எவ்வாண்டிலிருந்து அமல்படுத்தப் படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. விநயகம் : ஸார், நீலகிரிப் பிரதேசம் ஒரு மலைப் பிரதேசமாக இருப்பதினுல், அங்கு பயிற்சி பெறவேண்டுமென்று நினைக்கிற ஆசிரிய மாணவர்கள் வெகுதூரம் கோயம்புத்தூர் அல்லது வேறு ஊருக்குப் போகவேண்டிய நிலைமை இருக்கிறது. அதுவும் பெண்களாக இருப்பவர்களுக்கு வசதியாக இருக்கும்பொருட்டு, இதில் கொஞ்சம் நஷ்டம் ஏற்பட்டாலும் அரசாங்கம் அவர்களுக்காக அங்கு ஒரு டிரைனிங் ஸ்கூல் வைப்பதற்குத் தயவுசெய்து இந்த ஆண்டிலாவது முயற்சி செய்து, வருகிற பட்ஜெட் ஆண்டில் அதைச் சேர்த்துக்கொள்ள ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இரண்டு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் அங்கே இருக்கின்றன. ஒன்று பெதால் பேஸிக் டிரைனிங் ஸ்கூல், ஊட்டி. அங்கு 40 ஆசிரியைகள் ஆண்டுதோறும் பயிற்சி பெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அரசாங்க ஆதாரப் பயிற்சிப் பள்ளி ஒன்றும் கூனூரில் இருக்கிறது. இரு